தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 10] MADRAS:—SUNDAY MARCH 4, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

சத்தியதூதனுக்கோர்புத்திகூறல். | தத்துவவிவேசினியும். இந்துசாஸ்திராபாசமும்.

சத்தியதூதனுக்கோர் புத்தி கூறல்.

நிகழுமாண்டு ஜனவரிமதியிற் பிரசுரித்த மூன்றா மெண்ணையுடைய சத்திய தூதனென்னும் பத்திரிகை யொருவரால் நமக்குக் கிடைக்கப்பெற்று அதன் மூன்றும் பக்க மிரண்டாங்கலத்தில் **கோழியும் முட்டையும்** என்ற மகுடத்தைநோக்கலுற்றனம. அது இது.

“ஓர் பாலியன் தன் இனத்தார் வீட்டிற்கு விருந்துண்ணப் போனபொழுது அங்கே வாசித்துக்கொண்டிருந்த இரண்டு சிறுமிகளை என்ன கதை வாசிக்கிறீர்களென அதற்கப்பெண்கள் ஐயா! அது கதையல்ல **கடவுள்நமக்கருளியவேதம்** என்றதாகவும்; அதற்கவன் அப்படியானால் நீங்கள் கடவுளொருவனுண்டென்று நம்புகிறீர்களோவென, அப்பெண்கள் நீங்களதை நம்புகிறதில்லையாவென்றதாகவும்; அவன் முன்னே நம்பினதுண்டு, ஆனால் பட்டணம்போய்க் கணிதம், தத்துவசாஸ்திரம், ராஜாங்கநூல்கள முதலியவற்றை வாசித்துக் கடவுளென்பது வெறும் வார்த்தையென்றறிந்துகொண்டேனென; அதற்கொருபெண் நீரறிந்த சாஸ்திரங்களை நான கனவிலுங் கண்டறியேன், நீர் கடவுளில்லையென்று சாதிக்கத்தக்க பண்டிதராயிருப்பதால் ‘கோழிமுட்டை யெங்கேயிருந்துண்டாகிற”தென்றாளாம்; அதற்கப் பாலியன் கோழியிலிருந்துதானென; அவள் கோழியா, முட்டையா, எது முந்தியது ? என்றாளாம்; பாலியன் கோழியென்றானும்; அதற்கவள் முட்டையிலிருந்து புறப்படாத கோழி யொன்றிருந்ததென வொப்புகிறீர்போலுமென்றனளாம்; அதற்கவன திகைத்து இல்லை யில்லை முட்டைதான் முந்தியதென்றானும்; அதற்கச்சிறுமி புன்சிரிப்புற்று, அப்படியானால் கோழியிடாத வொருமுட்டை யிருந்ததெனவொப்புகிறீர்போலுமென; அப்பாலியன் மறுபடியு மதிமயங்கிக் கோழிதான் முன்னே யுண்டாயிற்றென்றானும்.”

இதை வாசிக்கு மன்பர்களே!

பன்னாள்தொட்டிந்நாள்மட்டு மிந்துக்கள் சாத்திரங்கள் பலவாலும் இந்துக்கள்பலராலும் வழங்கிவரும் “வித்துமுந்தியதா, அல்லது விருட்சமுந்தியதா ? எனும் நியாயத்தை யாவரறியார். அன்றியுமிந்நியாயம், இந்துக்களுட் பல்லோர் தாபரபக்ஷிணிகளாயிருந்தார்களென்பதையுங் காட்டுகின்றது. இக்கிழக்கதையை மாமிஸபட்சிணிகளாகிய கிறிஸ்தவர்கள தற்காலந் தாங்களே நூதனமாய்க் கண்டுபிடித்ததுபோல “முட்டை முந்தியதா, அல்லதுகோழி முந்தியதா?” எனும் நியாயத்தானுமதனுமோர் சிறுமியினாலும் நாஸ்திகனொருவன் தோற்கடிக்கப்பட்டதாக இவ்வுதாஹரணக் கதையாலிந்து பால்யர்களுக்குப் புத்தி கூறுகின்றார்கள். இந்நியாயத்தானே கிறிஸ்தவபோதகர்களாகிய பெரியோர்களுக்குச் சில புத்திமதிகளை நாம கூறுவோம்.

ஓ, கிறிஸ்தவர்களே ! கிறிஸ்தவபோதகர்களே !

கோழி, முட்டைமுதலிய வுபமானக் கதைகளால் கடவுளிருப்பைச் சித்தாந்திக்கப்புகுதல தரும்புபற்றி கடல் கடக்குந் துணியையும் முறத்தைக்கட்டி யாகாயத்திற் பறக்க முயன்றானையும் நிகர்க்குமேயன்றி பிறிதென்னை ? கோழி முந்தியதா ? முட்டை முந்தியதா ? எனும பிரசினைகளறியாமையேயன்றி வேறல்ல. எப்படியென்றால்—மக்களுக்குச் சிசுத்வம், காவ்காபுத்தம், பக்குவம், பால்யம், யௌவனம், வார்த்திபம் எனும் பருவங்களாறும் இயற்கையாயுள்ளனபோல, கரு, முட்டை குஞ்சு, விடை, முட்டைக்கோழி, கிழக்கோழி யெனு மறுபேதங்களும் பட்சிகளின் பருவங்களாகும்.

இப்பருவபேதங்களின் தாரதம்மியங்களை யுணராத சில கிறிஸ்தவர்கள் முட்டையையுங் கோழியையு மகா பிரமாதமான யுக்தியாய் நினைந்து, மகா [illegible] புத்தசாமர்த்தியதால் நவீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டதைப்போன்ற விதனையோர்பற்றுக்கோடாய்ப்பற்றி கோழி முந்தியதா ? முட்டை முந்தியதா எனுங் கடாக்கள், கிழவன் முந்தியவனா ? குழந்தை முந்தியதா என்று கிழப்பருவத்தையுங் குழந்தைப் பருவத்தையும் நோக்கிக் கேட்குங் கேள்விகள்போலாறதேயென மதியுளோர் யாவரு மங்கிகரிக்கற்பாற்றே. கிழத்தன்மை முந்தியதா, அல்லது பிள்ளைத்தன்மை முந்தியதா ! எனுமிவை சாமானய மனிதருக்கும் நன்குபுலப்படக்கூடியனவாயிருக்க, பிரசங்கிகளெனும் பெயர் வாய்ந்த சில கிறிஸ்தவ போதகர்களும், சத்தியதூதனு மறியாமலிருப்ப தென்ன மதிமோசம !

இக்குருட்டுயுக்தியா லம்முருட்டு நாஸ்திகனை யோருருட்டுவிழிச் சிறுமி ஜெயித்தது மோர திருட்டுவிதி நாஸமே.

கிழத்தன்மை முந்தியதா ? பிள்ளைத்தன்மை முந்தியதா? என்று மாடுமேய்க்குஞ் சிறுவனைக் கேட்டபோதனும் பிள்ளைத்தன்மையே முந்தியதென்றுரைக்கும் பிரத்தியட்சானுபவமிருக்க, இவ்வநுபோசம் கிறிஸ்துமதபோதக சத்தியதூதனுக்கில்லாமைக் கருதாபப்படுகின்றோம். மேலுங்கோழி முந்தியதா முட்டை முந்தியதா ! எனும் வினாக்களுக்கு மேலே நாமுரைத்த நியாயத்தானே முட்டையே முந்தியதெனுஞ் சமாதானமிருக்க, கோழியிடாத முட்டையா ! முட்டையிலிருந்து வராத கோழியா ? என்று மயங்கிப்பேசல மதுபாநிக ளனுபவமாகும்.

நெடுங்கணக்கு வாசிப்போனுக்கு **ஆத்திசூடி** மலைபோலிருப்பதுபோல, கிறிஸ்தவர்களுக்கும் சத்தியதூதனுக்கும் ஷெக்டாக்களிரண்டு மலைகளைப்போலும். கிழப்பருவத்தின் முனபருவம் குழந்தைப்பருவமேதவிர, குழந்தைப்பருவத்தின் முன்பருவங் கிழப்பருவமென வுன்னியோ, கோழிமுந்தியதென்பது ! நிற்க.

சிசு கிழவனாகுமா ? கிழவன் சிசு ஆவனா? அதுபோல முட்டை, கோழியுமல்ல; கோழி, முட்டையுமல்ல. ஆனால் முட்டையென்பதோ சேவலுங் கோழியுங் கூடியதாலுண்டானதென்பதை யாவரறியார் ! இதனால், முட்டை யெனபது சேவலின் சுக்கிலத்தாலும், பெட்டையின் சோணிதத்தாலுமாகின்றது வெளிச்சம் ஆகவே, முட்டைக்கு முந்தினது சுக்கில சோணிதமெனுந் தாது. அத்தாதுவோ உணவாலாவது. உணவோ பௌதிகம். பௌதிகமோ பூதங்களன்றியில்லை. இந்நியாயங்கொடு ஓ, சத்தியதூதா ! நின் பிரசினைகளாகிய கோழியையும் முட்டையையுஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால் முடிவை நீயே காணுதி. இத்தகைய வெறும பேச்சைப் பேசி வறியோர்களைக் கிறிஸ்துமதத் தட்படுத்துவீர்களே யொழிய எம்போலிகளை யிழுக்கவொணுதா ? எம்போலியரிடத்தில் போதகர் போதனையெல்லாம் வாதனைக்கிடமென்றுதானே, நாட்டுப்புறத்தானைப் பாட்டுப்பாடி யிழுக்கின்றீர்கள். கிறிஸ்தவர்களே ! உங்கள் பாட்டையு மேட்டையும் நீட்டுகின்றீர்களே, யாவர்பால் ? முழுமூடசிகாமணிகள்பால்தானே.

மயிரினால் மலையைக்கட்டி யிழுப்பதுபோல கோழி,முட்டையெனு மயிரால், மலைபோன்ற நாத்திகனை யிழுத்துவிட்டதல்லவா மகா ஆச்சரியம்! அந்நாத்திகனை செயித்த சிறுமியைச் சற்றே நம்பால் தூதுவிட்டு முற்கூறிப் போதருமன்ன வினாக்களால் வினவச்செய்வீர்களேல் மிக்க பயனுடைத்து. அன்றியு முன் ஆத்திகனான நாத்திகனோடு நம்மையுஞ் சேர்த்துக் கணக்கிட விரண்டாகும்மே. காட்டாடு மந்தைசேரல் குறும்பருக் கதிர்ஷ்டந்தானே. அதுபோல நம்மையு மற்றுமுள்ள நாத்திகக் குழுக்களையு முங்கள் மதத்தில் சேர்க்க முயன்றால் லாபந்தானே.

சிறுமி யொருத்தி கேட்கச் சாத்தியமல்லாத கேள்வியைக் கேட்கப் புகுந்ததும், சாஸ்திரப் பயிற்சியுள்ள நாஸ்திகன் விடைவிடுக்காதொழிந்ததும், ஏசுவானவர் செய்த புதுமைகளிலிதுவுமொன்றும்போலும். நிற்க.

கிறிஸ்தவர்களுக்கு வக்காலத்தாக வந்த சத்தியதூதா ! கோழி முந்தியதா ? **முட்டை முந்தியதா? எனும் பிரசினை**

களுக்கு முட்டையென்ருல, அம்முட்டை கோழியல்ருந்துதானே வந்திருக்கும், அக்கோழி யதன் முன்முட்டையிலிருந்துதானே வந்திருக்கவேண்டும், அம்முட்டை அதன்முன்கோழியிலிருந்துதானே வந்திருக்கவேண்டுமென; கோழிக்கு முட்டையுமுட்டைக்குக் கோழியுங் காரிய காரண, காரணகாரியங்களாகின்றன. அங்ஙனே மேல்நோக்கின் ஆதி முட்டைக்குக் காரணம் நின்னபிப்பிராயப்படி கடவுளேயல்லவா? இனி யவர்க்குக் காரணம் யாவர்? என்ருல், அதன் முன்கடவுளென்றும்; அவர்க்குக் காரணம் அதன்முன் கடவுளென்றும்; அவர்க்குக் காரணம் யாவர்? யாவர்? யாவர்! எனின் அதன்முன கடவுள், அதன்முன் கடவுள், அதன் முன்கடவுள் என்று மேலே சென்று நிற்குமேயன்றி வேறு விதியிலாது அநவஸ்தா தோஷத்தை வலிய வழைத்து தீராச் சந்தேகமென்னு முடிவு பெருப் பெருவழக்கிலிட்டு, நாஸ்திகருளோர் சாரராகிய ஸ்வக்ஞானிகள்குழுவைச் சரணடைகின்றனை. ஓ, சத்தியதூதா! நம் ஸ்வஜ்ஞான சங்கத்தவருள் நீயுமொருவனுயினை. ஆயதால் நமது நண்பருள், நீயுமொருவனேயல்லவா? இனி நமக்குமுனக்கும் வழக்கேது. என்ருலும், நாஸ்திகனை நீ வேருக நினைந்து பேசிய குற்றத்திற்குச் சிட்சையாகச் சில நியாயங்களை யியம்பியுள்ளோம். கண்டு கவனித் தடங்குதி.

ஷை கதையினுரம்பத்திலேயே, என்ன கதை படிக்கிறீர்களென்று பாலயன் கேட்டதற்குச் சிறுமிகள் அது கதையல்ல, **கடவுள் நமக்கருளிய வேதம்** என்றவிடையானே, கடவுளருளியதென்பதிற் சந்தேகித்து கடவுள் **சொல்லியருளிய** வேதமா? அல்ல **தெழுதியருளிய** வேதமா? இரண்டி லெதுவாயிருந்தபோதினும் கடவுளுக்கு வாயேனுமல்லது கையேனு மிருந்ததென்ருகின்றதே. ஆகவே கடவுளும் நம்போன்ற சரீரத்தை வகுத்த வோர் கொட்டாப்புளி யுருவமாகின்ருரல்லவா! அங்ஙனமிருக்கக் கடவுள் **அரூபி** யென்றேனமுகின்றீர்கள்? ஓவ்வோரமயத்தில் **அரூபி** யென்றும், மற்ருெரமயத்தில் **ரூபி** யென்றும் பேசுங் கிறிஸ்தவர்கள் வாக்கியங்களே கடவுளுக்குத் தாம்பூலம் பிடிக்க, நாங்கள்மட்டும நுங்கள் கடவுளைப் பறக்கடிப்பதாயேன்புலம்புகிறீர்கள்; கிறிஸ்தவர்கள் பிடிக்குந் தாம்பூலத்தைத்தானே நாங்கள் மறுகை வாங்குகின்ருேம். கிறிஸ்தவர்களாகிய நீங்களே யெங்களுக்கு வழிகாட்டியாகின்றமையால் முதல் நாஸ்திகர் நீங்களேயாகின்றீர்கள், அதனை யறியாமல் நாஸ்திகரை யேளனஞ் செய்யப் புகுவது தங்களைத் தாங்களே யவமானப்படுத்திக்கொள்வதல்லாது மற்றென்னை! நிற்க.

கணிதம், தத்வசாஸ்திரம், ராஜாங்க நூற்கள் ஆகிய விவற்றை வாசித்துக் கடவுள் இல்லையென்று ரூபிக்கலாமெனும் பொருளையேற்குஞ் சத்தியதூதா!

நின் வசனம் அசத்தியமும், அநியாயமுமானதல்லால் வேறென்ன? எப்படியென்ருல் லௌகிகம், வைதிகமெனுமிருமைகளுள கணிதம் ராஜாங்கநூற்களிரண்டும் வைதிகமா! அல்லது லௌகிகமா? லௌகிகத்தையே பேசும் கணிதம். ராஜாங்க நூற்களைப் படிப்பதனுல் வைதிக சாம்பிரதாயமாகிய கடவுட்டன்மை யெங்ஙனம் விளங்கும்? அவைதிகமாகிய வயித்திய சாஸ்திரமுணர்ந்தோனுக்கு வானசாஸ்திரக்ஞானமுண்டாமா? கிஞ்சித்துமிராதே. அதுபோல லௌகிகசாஸ்திரப்பயிற்சியால் வைதிக வுணர்வு அற்பமுமுண்டாகாதென்பது தெள்ளென விளங்க; கணித, ராஜாங்கநூற்களின் பயிற்சியால் கடவுளை யுண்டோவில்லையோவென நிர்ணயிக்குஞ் சக்தி யுண்டாவதும் கிறிஸ்துவானவர் செய்த அறபுதங்களி லொன்றுபோலும். சத்தியதூதன் எனும் பெயரை வைத்து அசத்திய வாபாஸங்களையும், யுக்தி முரண்களையுமே யுரைத்து **பரிசுத்தஆவி**யாற் புதிதமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட வூரில்லாத யோசநா புருஷத்வபோதத்தை யென்னென்று சொல்வோம். கிறிஸ்தவர்கள் புத்திக் கெவை கடினமாகத்தோன்றுகின்றனவோ அவை யேனையர்க்கு மங்ஙனேதானிருக்குமென்று அவர்களெண்ணுவது கண்களை மூடிப் பாலையுண்டு உதைபட்டோடுமார்ஜால நிகராமன்ருே!

இன்னன அசத்தியமும, அயுக்தமும், அற்பமுமாகிய விஷயங்களையே யலங்காரமாய்ப் பூண்டிருக்கும் சத்திய தூதா!

நீ மற்றவர்களைத் தூறு சொல்லப் புகுந்தது அவிசாரி யயலாளைப் பழித்ததுபோலும்!

இத்தகைய அசம்மத வசனங்களைக் கோர்த்துக், கோழிக்கு முட்டைக்குஞ் சேர்த்து, சிறு பெண்களைப் பார்த்து, அவர்களுடங் கொடுத்து; பால்ய நாஸ்திகனை யடுத்து, அவனகஞானங்களைக் கெடுத்து, ஆஸ்திகத்துட்படுத்து மற்புத சாமர்த்தியமுடைய சத்யதூத போதனை, நமக்கு நித்யநாத வாதனையாயிருபபதால் ஏ, சத்தியதூதா!

அவ்வாதனைகளை நீக்கி, நம் போதனைகளைநோக்கி, ஆத்திகத்தை வம்பிட்டு, நாத்திகத்தைக் கும்பிட்டு, பலர்க்குமிதைக்காட்டு, பராபரனையோட்டு; இல்லையேல், உன்பெயரடைமுன்னே அகாரவுயிர்கொடு சொன்ஞேம்.

கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி.

பிப்ரவரி 15வ ஸ்ரீலோகரஞ்சனியில்

தத்துவ விவேசினியும். இந்து சாஸ்திராபாசமும்.

இந்து=இந்து தேசத்தாருடைய, சாஸ்திரம்=புத்தகங்களிலுள்ள, ஆபாசம்=பொய்; என்ருல் இந்து தேசத்தார் இடையிடையே தற்காலத்திய பூனை நாஸ்திகரும், சுவடெலிப் பிரமசமாஜத்தரும்போலவே வேற்றபிப் பிராயங்கொண்டு செய்து வைத்தசில பொய்யொழுங்குகளாம். [இதைத்தான் இந்து சாஸ்திரங்களை முற்றுமாராயச் சக்தியற்ற சில அநத்காரிகள் ஊமைகளாய், கிறிஸ்துவநவீன பிரமஸமாஜநாஸ்திகமுதலிய ஆபாசமதங்களிற் சேர்ந்துழலுகின்ருர்கள். அப்படிச் செய்வது மோஹன பாஞ்சராத்திர ஆகமாதிகளை மெய்ச்சாத்திரமெனவும், வைசூரியை மாரியெனவும், கொள்ளை நோயை சூரியெனவும், இன்னுமிழிஞர் கொள்கையை யுடையனவுமாம்.] இவைகளுக்கு யாதொரு சிறிதாதாரமும் ஆதியிலுண்டாகாது அனுதியாயுள்ள இந்து சாஸ்திரமென்னும் வேதத்தில் கிடையாது. வேதம்=அறிவு. இப்படி ஆதாரங்கிடையாத அவித்தியா விஷயங்களைப்பற்றி நீள எழுதுவது அப்பிரயோசனமுமாம் என்பது புத்திமான்களுக்குத் தெள்ளென விளங்கும். ஆயினும் கடந்த மாதம் சென்னையில் வெளியாகிய தத்துவ விவேசினி என்னும் தமிழ்ப் பத்திரிகையில் (A. P.) ஏ. பீ. என்னும் ஒருவர் சைவரென்னும் பெயரைத் தாங்கி இதுவிஷயமாய் எழுதவும், அதை யனுசரித்து அப்பத்திராசிரியர் அபிப்பிராயங் கொடுக்கவும் நிமிர்ந்துவிட்டபடியால், யாமும் அவர்களை விளித்து சிறிதெழுதுகிறோம்.

தத்துவ விவேசினியிற் கிளம்பிய ஏ. பீ. யே! நீவிர் உண்மைச் சைவராஞல் எம்மைக் கேட்டுய்வீர். போலிச்சைவராதலால் தத்துவவிவேசினியில் நுழைந்தீர். அப்படி நுழைந்து திரிந்ததும், விவேசினி இரஞ்சினியை இகழுமென்றே யன்றி வேறில்லை. நீங்கள் இகழ்வதால் எமது ஒளி குறையுமோ! நீவிர் சந்தேகியைப்போல் வேடங்கொண்டு **எமது**கருத்தையறிந்துகொள்ளாமல் எல்லாந்தெரிந்த வல்லவன்போல நடித்து உலகத்தைக்கெடுக்கு நிமித்தம் நிந்திக்கப் புறப்பட்டமையால், யாம் நும் விஷயத்தைப் பொருட்படுத்தி சிறிதெழுதுகிறோம். கேண்மின்! **யாம்** இரஞ்சனி 11-பக்கத்தில் "புலைகொலையுற்ற பேய்மதக்கூத்து" என்னும் மகுடத்தின்கீழ் "கிறிஸ்துவர்கள் இந்து சாஸ்திரங்களிற் கற்றவை இந்துக்களிற் சாரமற்றதெனக்கிடக்குஞ் சில ஆபாசங்களே" என்று வரைந்திருப்பதைப் பார்த்து உமக்காச்சரிய முண்டாயது எமக்குப் பேராச்சரியமே. இதுவிஷயத்தில் உமதறிவைச் செலுத்தி விரித் தெழுதியதற்குப் பேரானந்தங்**கொள்ளுகிறேன்**. இப்படிக் கேட்போனுஞ் சொல்வோனு மிருந்தாற்ருனே ஆசிரிய சீடக்கிரமம் ஜீவிக்கும். நீவிர் "இந்து சாஸ்திரங்களிலும் ஆபாசங்களிருக்கின்றனவென்று யான் நினைத்ததில்லை" என்றபடி புத்தி பூர்வமாகவெண்ணி உண்மையைக் கடைப்பிடிப்பதா யிருந்தாற்ருனே அவ்வாபாசங்களைக்களையக்கண்டு பிடிப்பீர். அதுவிட்டு கிறிஸ்துவ அத்வைத நிரீஸ்வர முதலியமதங்களை ஆராய்ந்து திரிந்தால் எவ்வண முண்மையை யடையக்கூடும். நும் ஐயவினுவின்படியே, ஸ்ரீவிசிஷ்டாத்வைதசித்தாந்த பிரபோத சங்கத்தார் தவிர மற்றொருவருக்கும் அவ்வாபாசங்களகப்படுவது கஷ்டந்தான். "கழித்துக்கிடக்குஞ் சில ஆபாசங்கள் என்றதனுல் இன்னுமனேகமிருக்கலாமென்று தோன்றுகின்றது; இனி ஆராய்ச்சி செய்யச்செய்ய அவை கொஞ்சங் கொஞ்சமாய்தள்ளுகடையாகும்போலும்" என்றீரே! அது நுமதாராய்ச்சிக் குரியதுதான். மேற்கண்ட சங்கத்தார் முனனரே யாராய்ந்து தெளிந்திருக்கிருர்கள். எமதபிப்பிராயத்தின்படியே கிறிஸ்துவர்களோ இந்து சாஸ்திரங்களிற் கழித்துகிடக்குஞ் சில ஆபாசங்களைத் திருடினவர்கள். நவீன பிரமசமாஜ 'நிரீச்சுரவாதிகள் முதலினரோ அனேகமாகிய ஆபாசங்களைத் திருடினவர்கள். இந்துக்களோ அவ்வாபாசங்கள் நீங்கியிருக்கும் உண்மையார்த்தங்களைப் பெற்றவர்கள். அதாவது: கிறிஸ்துவர்கள் போலியிந்துக்கள் கடைப்பிடித்த புலை சொலை களவுகளும், பூதபைசாசங்களின் சேஷ்டிதங்களுமாகிய தாமதக் குணங்களையுடையவர்கள். பிரமசமாஜ நிரீஸ்வரமதவாதிகள் காமக் குரோத லோபமோக மதமாச்சரியம் முதலிய இராஜசச் செய்கைகளை யுடையவர்கள். உண்மை இந்துக்கள் மெய்மை, பொறுமை, தயை, சாந்தம் தேவதாபக்தி முதலிய சாத்துவிக சற்குணங்களைக்கொண்டவர்கள். இக்காரணங்களைக் கொண்டுதான் "இந்து சாஸ்திரங்களிற் கழித்துக்கிடக்குஞ் சில ஆபாசங்கள்" என்றது. ஆகையால் இனி கழித்துவிட்டவைகளாகிய தாமத இராஜசங்களை ஆராயாது கழிக்கக்கூடாது நிலைபெற்றிருக்கும் சாத்துவிக உண்மையார்த்தங்களை மேற்படி சங்கத்தாரிடங்கூடி குலவியறிந்து வாழ்வீராக.

இது நிற்க 9-ம் பக்கம் முதறகலத்திலே கூறிய சிதசிதீஸ்வர தத்துவப் பொருள்களைப்பற்றி உமது கல்வி கேள்வி முதவியன

வற்றை யொளிக்காது யெழுதிவிட்டீர். அதன் அந்தர்ப்பகிர்க்கதார்த்தங்களை உமது உண்மைப் பெயரை எமக்குத் தெரிவிப்பீரேல், அப்பெயரை வெளியிடாமலே தக்கவிடை கொடுப்போம். அப்படிச் செய்யாதொளிவீரேல், சமயம் வாய்த்தபோது விளக்குவாம். இதுவுமிற்க, உம்மைக் கொடுத்தடுக்கி வந்தவிஷயங்கள எங்கே எகைக்கொண்டு முடிந்ததோ? எனச் சந்தேகித்து தத்துவவிவேசினியைக் கேட்டீர். அதை (;) இக்குறிகள வந்தவிடத்தின் முடிவில் முடிந்ததென்றறிக. இதை யறியாதவர் எமது விஷயங்களை எப்படி ஆராய்ந்து தெளிந்தீரோ! தெரியவில்லை.

இவையின்றி அப்பத்திராசிரியரும் ஸ்ரீலோகரஞ்சனியில் ஆஸ்திக நாஸ்திக மதங்களின் லக்ஷணங்களைச் சொன்னதே யில்லாமல் சித்தாந்தப் படுத்திச் சொலல வந்ததல்லவென்றும், அவை முற்றுமே ஆபாசமென்றும், அவற்றைப்பற்றி முந்திய பத்திரிகைகளில பலவிசை கூறியிருக்கிறதென்றும், வேண்டுமானல் மறுபடி எடுத்துக் கூறுவோமென்றும் பெருங் கூத்தாடுகின்றார். இவர் சித்தாந்த சங்கம் சித்தாந்தப்படுத்துமேயொழிய இலக்ஷணத்தைச் சொலலா தென்பதை யறியாதும், தம்ம ஆபாசத்தை யொழிக்க வழி யறியாமல், மற்ற ஆபாசங்களைக் கூறுவதை பிறரறிந்திருப்பதை யறியாதும் மயங்குவது பேராபாசமே.

மேற்கண்ட மறுமொழி எழுதிய ஸ்ரீலோகரஞ்சனி பத்திரிகாசிரியர் எழும்புகிறது கிளம்புகிறது, நிமிருகிறது என்கிற தமக்கு வழக்கமான ஒழுக்க வசனங்களைப் பிரயோகிக்கிறவராயிருக்கிறார். அவர் கூறியபடி, உண்மை இந்துவாகிய சாத்துவிக சற்குணங்களையுடைய இவர் ஜனவரி 29உ தத்துவவிவேசினியில் "அவை முற்றுமே ஆபாசமென்பது எமது அபிப்பிராயமாதலாலும், அவற்றைப்பற்றி முந்திய பத்திரிகைகளில் பலவிசை கூறியிருப்பதாலும், வேண்டுமாயின் ஆபாசங்களை மறுபடி எடுத்துக் கூறுவோமேயன்றி, அந்தச் சங்கதிகளை விளங்கச் செய்யவேண்டிய கடமை அவற்றை எழுதினவரதேயாகும்." என்று யாம் வரைந்ததை வாசித்தமாத்திரத்தில் கோபங்கொண்டு, பிரமசமாஜ நிரீஸ்வர மதவாதிகளுக் குரியனவாக அவர் சொல்லுகிற இராஜசச் செய்கைகளைமேற்கொண்டு, எம்மைப் "பெருங்கூத்தாடுகின்றார்" என்றும், யாம் மயங்குகிறதாகவும் கூறினர். மேற்படி தத்துவ விவேசினியை வாசித்த நண்பர்கள், யாம் மயங்கிப் பெருங் கூத்தாடுவதையும், இவர் சரியான நியாயஞ் சொல்ல வகையறியாது மயங்கி, தலையை விரித்துக்கொண்டுதத்தளித்துப் பேய்க்கூத்தாடுவதையும், தெரிந்துகொள்ளும்பொருட்டு, இவருடையமறுமொழியைமாத்திரம்பிரசுரஞ் செய்வது போதுமென்றுகருதியிருக்கையில், A. P. என்பவர் அம்மறு மொழியிலுள்ள சில வார்த்தைகளுக்குக் குறிப்புடனே அதையும் தனது கடிதத்தையும் பிரசுரஞ் செய்யும்படிக் கேட்டுக்கொண்டனர்.

ஜனவரி 15-உ ஸ்ரீலோகரஞ்சனியில், கிரிஸ்தவர்கள் இந்து சாஸ்திரங்களிலுள்ள சில ஆபாசங்களைக் கற்றவர்களெனச் சாந்தமாகச் சொன்ன அப்பத்திரிகாசிரியர் A. P. என்பவர் கேட்ட கேள்விகளினுலும் யாம் கூறிய நியாயங்களாலும் அதிக கோபங்கொண்டு, "கிறிஸ்துவர்களோ இந்து சாஸ்திரங்களிற் கழித்துகிடக்குஞ் சில ஆபாசங்களைத் திருடினவர்கள், நவீன பிரமசமாஜ நிரீச்சுரவாதிகள் முதலினரோ அனேகமாகிய ஆபாசங்களைத் திருடினவர்கள்." என்று கூறினர். இதற்குப் பொருளென்னை? இவர் மூட்டை கட்டிப் பேழையில் பொதிந்துவைத்திருந்த பொக்கிஷமாகியஆபாசங்களைத் திருடிக்கொண்டார்களா? இந்து சாஸ்திரங்களிலுள்ள ஆபாசங்கள் இன்னின்னவை யென்று இவர் எடுத்துக் கூறினவருமல்ல; ஆயினும், யாம் இதுவரையில் இந்துவேத சாஸ்திர புராணுதிகளிலிருந்தெடுத்துக் காட்டிக்கண்டித்து வருகிற ஆபாசங்களை ஆபாசங்களெனவேயொப்புக்கொள்ளுகிறார்; இனி யாம் கண்டிக்கும் ஆபாசங்களையெல்லாம் அப்போதப்போது தாம் சழித்துவிட்ட ஆபாசங்களென்றே சொல்லச் சித்தமாயிருப்பதாகவும் காணுகிறார். இந்தத் திருட்டுவேலை செய்தவர் இவரது சங்கத்தாராய்த் தோன்றுகிறதேயல்லாமல் யாமல்ல. அந்த விசிஷ்டாத்வைத சங்கத்தார் எமதுசங்கப்புத்தகமாகிய மெய்யறிவுஐந்தாம்பாகபுஸ்தகத்திலே ஆறு பக்கங்களை யெடுத்து தங்கள் புத்தகத்தில் சேர்த்துக்கொண்டு, தாங்கள் சில இங்கிலீஷ் கிரந்தங்களிலிருந்தெடுத்து எழுதியதாக நடிப்புக்காட்டிய சங்கதியைச் சென்ற செப்டம்பர்-மீ 25-உ தத்துவ விவேசினியில் மாறுபாடு வெளிப்பாடு என்னும் தலைப்பின்கீழ் காணலாம். இந்த சங்கதியினுலே ஸ்ரீலோகரஞ்சனிபத்திரிகாசிரியர், "கிறிஸ்துவர்கள் போலியிந்துக்கள் கடைப்பிடித்த புலை கொலை களவுகளும், பூதபைசாசங்களின் சேஷ்டிதங்களுமாகிய தாமதக் குணங்களையுடையவர்கள்." என்று கூறியபடி, தாமே தாமதகுணங்களுக்குள்ளாயினர். இவரைப்பற்றி A. P. என்பவர் மற்றுஞ் சில சங்கதிகளெழுதியிருப்பதாலும், இவரோடு விசேஷமாக யாம் வாதஞ் செய்தால் புத்திமான்கள் எம்மையே சிரிப்பராதலாலும், இந்தமட்டில் நிறுத்தினோம்.

A. P. என்பவரெழுதியகடிதம்.

ஐயா,

ஜனவரி 29உயையுடைய தங்கள் பத்திரிகைமூலமாய் யான்வினவிய சிலவினுக்களுக்கு ஸ்ரீலோகரஞ்சனி பத்திரிகாசிரியர் கூறியமறுமொழியை சிலவார்த்தைகளுக்கு யான்குறித்த குறிப்புடனே தமதுபத்திரிகையில் பிரசுரஞ்செய்வீர்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அம்மறுமொழியிலே இந்துசாஸ்திரமென்பதற்கு அவ்வாசிரியர் உரைத்தஉரையையும், அதினுலே "இந்துசாஸ்திரமென்னும்வேதம்" என்று அவர்கூறிய வசனத்திற்குண்டாகிய அர்த்தத்தையும், இடையிடையே வருகிற இந்துசாஸ்திரம், இந்துக்கள் என்கிறபதங்களின் அர்த்தத்தையும் பத்திரிகாநண்பர்கள் சற்றுகவனிப்பார்களென்று நம்புகிறேன்.

வைஷ்ணவமாயினும், வேதத்தில் சிறிதாதாரமுமில்லாதசாஸ்திரங்கள் ஆபாசமானவையென்பதே அவரது துணிபென்றுதோன்றுகிறது. ஆயினும் அவ்வாறு சொல்ல அச்சமுற்று, மாரி சூரி வீரியெனவழுவழு கொழுகொழுவென்று உபாயமாய்வழிகாட்டிவிட்டார். ஏனெனில், அவ்வாசிரியர் ஜனவரி 15உயை யுடைய ரஞ்சனிமுதற்பக்கத்தில், உட்சமயப்போர் ஒருமைப்பாட்டிற்குச் சத்துருவாதலால் அதைமுற்றிலும் ஒழித்திடவேண்டுமென்று கூறியிருப்பதாலும், "நாம் ஒருவர்க்கொருவர் விரோதித்துச் சண்டை போடுவதற்கு இதுதக்ககாலமன்று;" "நாம் உள்சண்டையிலிருந்த சமயத்தில்தான் நம்மஜனங்களை (பாதிரிமார்) கிறிஸ்தவராக்கிவிட்டனர்" என்று விசிஸ்டாத்வைதசங்கத்தார் கூறியிருப்பதாலும், (இதுவிஷயத்தைச் சென்ற அக்ட்டோபர் 9-உ தத்துவவிவேசினியில் வெட்டவெளிச்சமென்னும் தலைப்பின்கீழ் காணலாம்) இந்துமதங்களுக்குப் பல வகுப்பினர் விரோதிகளா யேற்பட்டிருக்கிற இக்காலத்தில், பல இந்துமதஸ்தர்கள் யாவரும், நான்கு எருதுகள் ஒருமைப்பட்டிருந்தவரையில் சத்துருவுக்குத் தப்பித்துக்கொண்டிருந்த கதைபோல, ஒருமைப்பட்டிருக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டிருப்பதினுலேதான். எப்படியாயினும், இராயர் முன் சங்கீதம்பாடிய ஒருத்தியை பறைச்சியெனவறிந்த அப்பாஜி அதை ரூபிக்கும்பொருட்டு ஒரு பரணியில் சர்ப்பத்தைப் போட்டுக்கொண்டுவந்து கொடுத்து, இதிலுள்ளமுத்தாரத்தைத் தரித்துக்கொள்ளென்று சொல்ல: அதையவள்திறந்தவுடனே நாகசர்ப்பத்தைக் கண்டு பயந்து, அடியக்கே யென்று விழுந்த கதைபோல, அவருடைய மதத்துவேஷ உட்கருத்து அவரையு மறியாது வெளிப்படாமற் போகவில்லை. அந்த ஆசிரியர் அவரது ஜனவரிமீ 15உ பத்திரிகை முதற்பக்கத்திலே, ஆஸ்திக மதத்திலடங்கியவைணவ சைவாதி பலமதங்களில்பரத்துவாதி விஷயங்களில் சிற்சில பேதங்களிருப்பினும். ஆஸ்திக்கியத்துவத்துக்கு ஒரு குறையுமில்லையென்கிறார்.

இதனாலே பரத்துவமாகிய முதலுக்கே மோசமுண்டாயிருக்கிறது. பரத்துவம் ஒருகடவுளுக்கிருக்குமேயல்லாமல், பலவற்றிற்கிருக்கமாட்டாது. ஆகின்மையின், வெவ்வேறு மதஸ்தர்களைப்போல, வைணவ தாய் தந்தையருக்குப்பிறந்து வைணவத்திலே உழன்று வளர்ந்து வைணவராயிருக்கிற இவர் விஷ்ணுவுக்குப் பரத்துவத்தைச் சாதிப்பதுமன்றி, ஏனையமதங்களைப் பொய்மதங்களென நினைத்திருக்கிறாரென்பதும், சமயத்தை யநுசரித்து அவற்றை உபாயமாய்த் தழுவிக்கொள்ளுகிறாரென்பதும் விளக்கம். மேற்கண்டசங்கத்தார் மூன்றோ ஆபாசங்களை ஆராய்ந்து தெளிந்திருக்கிறார்கள் என்கிறார். ஆராய்ந்து என்கிறசொல்தவிர மற்றைப்படி தெளிந்தவர்களென்பதை யானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒவ்வொருமதஸ்தனும் சிறுபருவந்தொடங்கி பழக்கத்தினால் தன்தன்மதத்தில் மூடநம்பிக்கைகொண்டு, ஏனைய மதங்களை ஆபாசமானவையென்றே நினைக்கிறான். இவ்வாறு எந்தமதக்கடவுளுக்கும் இன்னும் பரத்துவம் நிலைபடாமையால், தத்துவவிவேசினி எடிட்டரவர்கள் முற்றுமே ஆபாசமெனக் கூறியிருப்பதை மேற்படி ஆசிரியர் ஊர்ஜிதப்படுத்துவதுமல்லாமல் சகல இந்துமதங்களையும் ஆஸ்திகமுமாகாமல, நாஸ்திகமுமாகாமல் நடுத்தெருவில விட்டுவிடுகிறார்.

உண்மையைக் கடைபிடிப்பதாயிருந்தாற்றானே அவ்வாபாசங்களைக் களையக் கண்டுபிடிப்பீரென்கிறார். ஆபாசங்களைக் கண்டுபிடித்துக் களைந்தபிறகுதானே உண்மையின்னதென்று தேறுகடையாகும். இவர் தாம பிறந்து வளர்ந்த மதத்தை மூட நம்பிக்கையினாலே குரங்கு பிடியாகப் பிடித்துக்கொண்டு, ஏனைய மதங்களை ஆபாசங்களானவையென்று நினைத்திருப்பதுபோல யான் நினைக்கவில்லையென்பதாக்கும். விசிஷ்டாத்வைத சங்கத்தார் தவிர மற்றொருவருக்கும் அவ்வாபாசங்களகப்படுவது கஷ்டந்தானென்கிறார். இதனாலே வைஷ்ணவந் தவிர, அத்வைதம், சைவம், ஸ்மார்த்தம், மார்த்துவமுதலிய இந்துசமயச் சார்பினர்கள ஆபாசங்களிலே முழுகியிருக்கிறார்களென்கிற அவருடைய உட்கருத்து வெளியாகிறதென்று வாசிபபவர்கள் தெரிந்துகொள்வார்கள். கிறிஸ்தவர்கள் இந்து சாஸ்திரங்களில் சில ஆபாசங்களைத் திருடினவர்கள், பிரமசமாஜ நிரீச்சுரவாதிகள் அநேக ஆபாசங்களைத் திருடினவர்களென்றதனால், இந்து சாஸ்திரங்களில் வரைகடந்த ஆபாசங்களிருக்கின்றனவென்று அவரே ஒப்புக்கொள்ளுகிறார.

குற்றொற்றயினையுடைய A. P. என்னும் எனது பெயர் முதலெழுத்துகளைத் தமிழில் நெட்டெழுத்துகளாக எழுதி, அவற்றினிற்றில் ஏகாரத்தையுஞ் சேர்தது விளிக்கிறார். என்னைப் பரிகாசஞ் செயயும்பொருட்டு அவ்வாறெழுதியிருப்பரேல், ஏனையோர்க்கு வேறுவழியாய் வருகிற பவ்வி இவரது வாயின் வழியாய் வந்ததென்றாவது யான் சொல்லவேண்டியிருக்கிறது; கிஞ்சித்தாயினும் இங்கிலீஷ் வாசித்தவராயிருப்பரேல், குற்றெழுத்துகளை நீட்டி யொலிக்கக்கற்ற திறமுடையவரென்றாவது சொல்லவேண்டியிருக்கிறது. இவரைப் பரிகாசஞ் செய்யவேண்டுமானால், இவரெழுதிய ஒவ்வொருவரியிலுமுள்ள தோஷங்களை யெடுத்துக் காட்டிப் பரிகாசஞ்செய்யவல்லேன், அது வியர்த்தமென்று விடுத்தேன்.

எனது உண்மைப் பெயரைத் தெரிவித்தால்தாம் தக்க விடை கொடுப்பதாகவும், அப்படிச் செய்யாதொளிப்பேனாகில சமயம் வாய்த்தபோது விளக்குவதாகவுங்கூறுகிறார். இதுவும் ஒருபோக்கென்று வாசிப்பவர்கள் தெரிந்துகொள்வார்கள். அற்பவிஷயத்தில் பெயர் முழுமையையும் தெரிவிப்பதினாலே விசேஷமொன்றுமில்லையெனக் கருதி, அடக்கத்திற்காகப் பெயர் முதலெழுத்துகளைமாத்திரம் குறித்தேன். அவர் கேட்பதினாலே, என் பெயர் அ. பொன்னுசாமி முதலியென்று தெரிவிக்கிறேன். இனியாவது இவர் ஓடி ஒளிந்து சமயம்பார்த்திராமல் விடை தருவரோ தாரரோ பார்ப்போம்.

எழித்துவிட்ட ஆபாசங்களாகிய தாமத இராஜசங்களைவிட்டு சாத்துவிக உண்மையார்த்தங்களை வைஷ்ணவ சங்கத்தாரிடங்கூடி அறிந்துவாழச்சொல்லுகிறார். சைவத்திலிருக்கிற யான் இவர்களோடு சேருவேனாகில், சிவனுக்கு பரத்துவஞ்சாதித்துக் கைலாயத்திற்கு வழிகாட்டுவார்களோ அல்லது விஷ்ணுவுக்குப் பரத்துவஞ்சாதித்து எனக்குநாமஞ்சாற்றுவார்களோ, அதை வாசிப்பவர்களே தெரிந்துகொள்ளலாம்.

"உம்மைகொடுத்துஅடுக்கிவந்தவாக்கியங்கள்" என யான் எழுதியிருக்க, இவர் "உம்மைக்கொடுத்தடுக்கிவந்தவிஷயங்கள்எங்கேளதைக்கொண்டுமுடிந்ததோ!" என்றுநான்கேட்டதாகப் புரட்டிஎழுதி, "அதை (;) இக்குறிகள் வந்தவிடத்தின்முடிவில் முடிந்ததென்றறிக." என்றுவரைந்திருக்கிறார். உத்தரவுசொல்லச் சரியான நியாயமில்லாமையால், புரட்டி புருட்டிப்பார்க்க வகை தேடினாரென்று வாசிப்பவர்கள் தெரிந்துகொள்வதுமல்லாமல், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல, தம்பிழையைத்திருத்தப்போய், பின்னும் பிழைபட்டொழுகுகின்றாரென்று நினைக்கவும் நினைப்பார்கள். ஏனெனில், பிழைபடுவதைத் திருத்திக்கொள்ளக்கவனிப்பதைவிட்டு, விஷயங்களை அதையென்றும், சிமிகோலனாகிய ஒருகுறியை இக்குறிகள் என்றும, முடிந்ததுஎன்றும், யாம்......பேரானந்தங் கொள்ளுகிறேனென்றும், ஒருமை பன்மை தெரியாதெழுதுகிறவராயும். வாக்கியங்களை முடிக்கும்வகைதெரியாதவராயுமிருக்கிறாரென்றும், அந்தஒருகுறியையே அவர்பலவிடங்களில் எழுதியிருப்பதால, அதைப்பலகுறிகளாக எண்ணிக் கொண்டாரென்றும் விளங்குகிறது. அன்றியும், மேற்படி மறுமொழியிலே, இந்த [ ] பகரவளைவுகளுக்குளடங்கிய சொற்களையும் அவற்றுலாய வாக்கியத்தையும் வாசிப்பவர்கள் சற்று கவனிப்பாராகில், "இதைத்தான்" என்னு மொருமைச்சொல் அதற்கு முந்திய "ஒழுங்குகள்" என்னும் பன்மைச்சொல்லைச் சுட்டுவதையும், அந்த ஒருமைச் சொல் வேறெந்தச் சொலலையுங்கொண்டு முடியாமல் நடுத்தெருவில்விடப்பட்டதையும் கண்டு களிப்பார்கள்! இவ்வளவு திறமுடையவர்தான் என்னை நோக்கி, "இசையறியாதவர் எமது விஷயங்களை எப்படி ஆராய்ந்து தெளிந்தீரோ" என்கிறார்.

இத்தகைய ஞானமுடைய ஆசிரியர் என்னிடத்தில் வாசித்துக்கொள்ளவேண்டியவராயிருக்க, என்னைச் சீடனாக்கிக்கொள்ளப் பார்க்கிறார். இவரைப்போல யான் ஆசிரியனெனப் பெயர்வகித்தவனல்ல, சிறந்த புத்திமான்களுக்குச் சீடனே; சாத்துவிக சற்குணருக்குச் சாலவும் அடிமை பூண்டவனே.

இவ்வாசிரியரைப்பற்றி இன்னும் விசேஷமாக எழுதவேண்டியதிருக்கிறது; ஆனால் இவர் என்னை வாயில் வந்தபடி வைவாரென்பது எனக்குத் தெரியும்; அதைப்பற்றி யான் இந்தமட்டில் நிறுத்திவிடவில்லை. தத்துவவிவேசினி இடந்தராதென்றே அச்சமுற்று நிறுத்தினேன்.

A. P.

அறிக்கை.

தமிழ்ப் பத்திரிகையின் எடிட்டராகிய நமது நண்பர் அ. முத்துசாமி முதலியார் மிகவும் வியாதியாயிருப்பதுபற்றி, பத்திரிகை காலாதீதமாய் வெளிவருவதற்காக யாம் விசனப்படுகிறோம். ஆயினும் பழையபடி சீக்கிரத்தில் கிரமத்திற்கு வந்துவிடுமென்று கோருகிறோம்.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.